CC.NO.22/2023

DATED:-15.11.2024

PW1:- சதீஷ்குமார், த/பெ. ஜீவானந்தம், வயது 45

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

1. நான் புகார் தாரர் நிறுவனத்தில் எத்தனை வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் கடந்த ஐந்து வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். புகார் தாரர் நிறுவனம் கூட்டான்மை நிறுவனமா அல்லது தனிநபர் நிறுவனமா என்றால் அது ஒரு தனி நபர் நிறுவனம் ஆகும். எங்கள் நிறுவனத்தின் தொழில் என்ன என்றால் இரும்பு மற்றும் ஸ்டீல் சம்பந்தப்பட்ட வர்த்தகம் செய்யும் நிறுவனமாகும். எங்கள் நிறுவனம் கம்பெனிஸ் ஆக்ட் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார் தாரர் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட சான்றிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். உத்தரவிடம் பட்சத்தில் என்னால் சான்றிதழை சமர்ப்பிக்க முடியும்.

2. எங்களிடம் பொருள் வாங்கும் வாடிக்கையாளரிடம் நேரடியாக கிரெடிட் பேசிஸ் என்ற அடிப்படையில் விற்பனை செய்கின்றோம் என்றால் சரிதான். அப்படி கிரெடிட் பேசிஸ் முறையில் வர்த்தகம் செய்யும் பொழுது, ஆவணம் எதுவும் எழுதிக் கொள்வதில்லை. வாங்கிய

பொருட்களுக்கு பணம் கொடுப்பது சம்பந்தமாக எவ்வாறு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்றால் புதிதாக வரும் நபர்களுக்கு பணம் கொடுத்து பொருள் வாங்கும் இம்மீடியட் கேஷ் என்ற முறையில் ஏற்கனவே பலமுறை தொழில் வர்த்தகம் செய்த நபர்களுக்கு கிரெடிட் பேசிஸ் அதாவது 15 நாட்கள் அல்லது 30 நாட்கள் அல்லது 45 நாட்கள் என்று வைத்துக் கொள்வோம்.

3. எதிரிக்கு எந்த முறையில் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டது என்றால் அவர் 30 நாட்களில் பணத்தை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டது. அவ்வாறு பொருட்கள் விநியோகம் செய்யும் பொழுது, ஆதாரமாக காசோலைகள் வாங்கப்படுமா என்றால் அவ்வாறு வாங்குவதில்லை. எந்த ஒரு ஆவணம் ஆதாரமாக பெற்றுக்கொள்ளாமல் 30 நாட்களில் அவர் பணத்தை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் எதிரிக்கு பொருள் விநியோகம் செய்யப்பட்டது என்பது நம்புபடியாக இல்லை என்றால் சரியல்ல.

4. சாட்சி தானாக முன்வந்து ஒவ்வொரு பகுதியிலும் அவர்களின் நிறுவனத்தைச் சார்ந்த மார்க்கெட்டிங் நபர்கள் அங்கு இருப்பார்கள் என்றும் அவர்களின் கள அறிக்கையின் பெயரிலேயே பொருட்கள் கொடுக்கப்படும் என்று கூறினார். எதிரி எத்தனை நாட்கள் எங்கள்

நிறுவனத்துடன் தொழில் வர்த்தகம் செய்து வந்தார் என்றால் மொத்தம் மூன்று மாதங்கள் செய்து வந்தார். கடந்த 2022 வருடம் எதிரி எங்களுடன் தொழில் பரிவர்த்தனை செய்தார். மாதம் எனக்கு ஞாபகம் இல்லை.

(நேரமின்மை காரணத்தால் குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).